**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. C.C.No. 69/2025**

**Deposition of Witness for Petitioner PW1 (LW1)**

| | | |
|---|---|---|
| **Name** | : | **போஜ்குமார்** |
| **Father's Name** | : | **பெள்ளி** |
| **Village** | : | **கண்ணேரிமுக்கு** |
| **Taluk** | : | **கோத்தகிரி** |
| **Calling** | : | **Acting driver** |
| **Age** | : | **39** |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**17.02.2026** **Witness Signature :**

**புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 12.05 PM (சாட்சியை கோத்தகிரி தலைமைக் காவலர் எண் 158 திரு. எம். மனோகரன் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டார்.**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். கடந்த 05.01.2024 தேதி அன்று வெளிச்சம் finance–ல் குழந்தைகள் பள்ளி செலவுக்காகவும், வீட்டு செலவுகளுக்காகவும் ரூ. 4,00,000/– கடனாக வாங்கினேன். அந்த தொகைக்கான மாதந்திர தவணையாக ரூ. 16,117/– செலுத்தி வந்தேன். 10.06.2025ம் தேதி செலுத்த வேண்டி இருந்தது. ஆனால் எனக்கும் எனது

குழந்தைகளுக்கும் உடல்நிலை சரியில்லாமல் போன காரணத்தால் மேற்படி தேதியில் தவணை செலுத்த முடியாமல் போய்விட்டது.

2. 11.06.2025 ம் தேதி மாலை 04.00 to 04.30 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு நான் வீடு திரும்பினேன். அப்போது வெளிச்சம் Finance–ல் வேலை செய்யும் நவீன், சதீஷ், யாபேஷ் ஆகியோர்கள் என்னுடைய வீட்டிற்கு வந்தனர். என்னிடம் பணம் கட்ட முடியாதா என கேனபுண்ட என்ற தகாத வார்த்தையால் திட்டி, யாபேஷ் என்பவர் கன்னத்தில் அடித்தார். யாபேஷ் கட்டியிருந்த பெல்ட்டை கழற்றி அடிக்க வந்தார். சதீஷ் என்பவர் கழுத்தை பிடித்து நெறுக்கி சுவற்றில் தள்ளினார். யாபேஷ் என்பவர் என் வீட்டிற்கு முன்னால் இருந்த வீட்டில் இருந்து இரும்பு கம்பியை எடுத்து அடிக்க வந்தார். மேற்படி சம்பவம் சம்பந்தமாக கோத்தகிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் 1 மற்றும் 2 தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு குடிக்கும் பழக்கம் இருக்கிறதா என்றால் அவ்வப்போது குடிப்பேன். நான் போலிசாரிடம் கொடுத்த புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் நான் வீட்டிற்கு சென்ற பின்னர்தான் எதிரிகள் சம்பவ இடம் வந்ததாக சொல்லியுள்ளேன். அந்த புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் 5 நபர்கள் என் வீட்டிற்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். புகாரிலும், போலிஸ் விசாரணையிலும்

யாபேஷ் என்னை கம்பியால் தாக்க வந்தார் என்றும், அவர் அணிந்திருந்த பெல்ட்டால் அடிக்க வந்தார் என்றும், கன்னத்தில் அடித்தார் என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு காவல் நிலையம் வந்தேன் என்றால் சம்பவத்தன்று 05.30 மணிக்கு காவல் நிலையம் வந்துவிட்டேன். நான் காவல் நிலையம் வந்த உடனே புகார் கொடுத்துவிட்டேன். புகாரை நான்தான் எழுதினேன். என்னுடன் காவல் நிலையத்திற்கு என் மனைவியும் வந்தார். நான் கொடுத்த புகாரிலும், எனது போலிஸ் விசாரணையிலும் சம்பவத்தை யார் யார் நேரில் பார்த்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் கொடுத்த புகாரில் எனது மனைவி சாட்சி கையெழுத்து செய்துள்ளார். அவரும் தனியாக புகார் அளித்துள்ளார்.

2. புகார் கொடுத்த பின்னர் போலிசார் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் தற்போது எனக்கு நியாபகம் இல்லை. அதன்பிறகு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார்களா என்றால் மறுநாளும் வந்து விசாரித்தார்கள். சம்பவத்திற்கு மறுநாள் காலை 11.00 மணிக்கு போலிசார் சம்பவ இடம் வந்து மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். போலிசார் விசாரிக்கும்போது யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் எல்லோரும் வேலைக்கு சென்றுவிட்டார்கள், வயதானவர்கள் இருந்தார்கள். நான் புகார் கொடுத்த பின்னர் மருத்துவமனைக்கு செல்லவில்லை. போலிசாரிடம் கொடுத்த புகாரிலும், விசாரணையிலும் 09.06.2024ம் தேதியன்று உடல்நிலை சரியில்லை என்பதால் தவணைத் தொகையை செலுத்தமுடியவில்லை என்பதை சொல்லியுள்ளேனா என்றால் புகாரில் சொல்லவில்லை, போலிஸ் விசாரணையில்

கூறியுள்ளேன்.

3. போலிசாரிடம் கொடுத்த புகாரிலும், விசாரணையிலும் நான் Acting driver ஆக வேலை செய்யும் விவரத்தை கூறியுள்ளேன். போலிசாரிடம் கொடுத்த புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சம்பவத்தன்று எங்கு வேலைக்கு சென்றேன் என்ற விவரத்தை கூறியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. போலிசார் சம்பவத்தின் மறுநாள் வந்தபோது, சம்பவ இடத்திலிருந்து எந்த தடயமும் கைப்பற்றவில்லை, கம்பியும் கைப்பற்றவில்லை.

4. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றாலும், நான் சம்பவத்தன்று குடிபோதையில் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. வெளிச்சம் finance–ல் பணம் வாங்கிகொண்டு தவணைத் தொகையை சரியாக செலுத்தாமல் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்திற்கு பின்னர் தவணைத் தொகையை எப்பொழுதாவது நான் கட்டியுள்ளேனா என்றால் கட்டவில்லை. எனது உள்நோக்கமே தவணைத் தொகையை சரியாக கட்டக்கூடாது என்பதற்காக பொய்புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த பின்னர் நான் எத்தனை மணிக்கு என் வீட்டிற்கு சென்று சேர்ந்தேன் என்றால் சரியாக நியாபகமில்லை. நான் புகார் கொடுத்து 1 மணி நேரத்திற்குள் போலிசார் சம்பவ இடம் சென்றுவிட்டு காவல் நிலையம் வந்துவிட்டார்கள்.

**1 மற்றும் 2–ம் எதிரியின் தரப்பில் செய்த குறுக்கு விசாரணை 3–ம் எதிரியின் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/– G. Amirdham, 17.02.2026
Judicial Magistrate,
Kotagiri